/அனகாபுத்தூர் நகராட்சி

சென்னை – 600 070.

கூட்ட எண்.23/2018 நாள். 28–2–2018

# தனி அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2018 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

28–2–2018ம் நாள் புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் பிப்ரவரி 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | பிப்ரவரி 2018 | 0 | 0 | 13 | 10 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்

**பொருள் எண். 3**

2017–2018ம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2018–2019ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 2015-16ஆம் ஆண்டில் தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் திட்டத்தின்கீழ் கழிப்பறை இல்லாத வீடுகளை கணக்கெடுப்பு செய்ததில் 121 வீடுகள் கண்டறியப்பட்டு பணிகள் கட்டி முடிக்கப்பட்டது. 18 வார்டுகளிலும் விடுபட்டுள்ள கழிப்பறை இல்லாத வீடுகளை மறு கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் 43 வீடுகள் கண்டறியப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள பரப்புரையாளர்கள் (Animators) மற்றும் மேற்பார்வையாளரால்

(Supervisor) 18 வார்டுகளில் மறு ஆய்வு செய்யப்பட்டதில் மேலும் கூடுதலாக 79 கழிப்பறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. எனவே, மூன்றாம் கட்ட ஆய்வின்படி 79 எண்ணிக்கை பயனாளிகள் மிகவும் வறிய நிலையில் உள்ளதால் தங்களால் மேற்கண்ட தனிநபர் கழிப்பிடம் அமைக்க இயலாது என்ற நிலையில் தனிநபர் கழிப்பிடம் அமைக்க உத்தேசமாக மதிப்பீடு ரூ.13000/- செலவாகும் என்று ஒப்பந்ததாரர் மூலமாக விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே 79 எண்ணிக்கை பயனாளிகளுக்கு தனிநபர் கழிப்பிடம் ஒப்பந்தாரர்கள் மூலமாக அமைக்க அரசு மான்யத் தொகை ரூ. 8000/- போக கூடுதலாக ஒரு கழிவறைக்கு ரூ.5000/- வீதம் மொத்தம் 79X 5000=3,95,000/- செலவினம் தேவைபடுவதால் மேற்கண்ட பயனாளிகளுக்கு சமுதாய பங்களிப்பு நிதியாக ரூ.3,95,000/- இந்நகராட்சிக்கு வழங்கிடுமாறும். மேற்படி 79 எண்ணிக்கை பயனாளிகளுக்கு தனிநபர் கழிப்பிடம் கட்ட அனுமதி மற்றும் நிதி பகிர்வு வழங்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –05 அவர்களிடம் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u> கூட்டம் அனுமதி வழங்கலாம்.

<u>**பொருள் எண். 5**</u>

அனகாபுத்தூர் நகர்மன்றத் தீர்மானம் எண்.94, நாள்.28.04.2017ன்படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான தளவாட பொருட்களான நீர்த்த சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர், பினாயில், தென்னந்துடப்பம், தகடு, மண்வேட்டி, பிக்காஸ், பாம்பே துடப்பம், மண் தள்ளும் பிரஷ் மற்றும் இதர பொருட்கள் இந்நகராட்சிக்கு விநியோகம் செய்ய தி ஜார்ஜ் டவுன் மல்டி பர்பஸ் இன்டஸ்டிரியல் கோ ஆப் சொசைட்டி லிமிடெட் என்ற நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்காக, நகர்மன்றத் தீர்மானத்தில் 2017-18ம் ஆண்டிற்கு ரூ.9.90 இலட்சம் செலவு செய்ய முன் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி தொகையானது ஜனவரி 2018 மாதத்தோடு செலவு செய்யப்பட்டுவிட்டது. எனவே, பிப்ரவரி 2018 மாதத்தில் மேற்கண்ட பொருட்களை விநியோகம் செய்தமைக்கு மேற்படி தி ஜார்ஜ் டவுன் மல்டி பர்பஸ் இன்டஸ்டிரியல் கோ ஆப் சொசைட்டி லிமிடெட் நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்கவும், மேலும் மார்ச் 2018 மாதத்திற்கு தொடர்ந்து மேற்படி பொருட்களை விநியோகம் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.50 இலட்சம் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.202 / 2017 / இ1)**

<u>**பொருள் எண். 6**</u>

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசு ஒழிப்பு பணிக்காக 41 கொசு ஒழிப்பு களப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் வீடு

தோறும் சென்று பணி விவரம் குறித்த கையேடுகள் மற்றும் பணியாளர்களின் வருகையினை குறிக்கும் துண்டு ஸ்டிக்கர்கள் சப்ளை செய்ய 22.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6$^{வா}$ வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | முதல் நிலை அறிக்கை படிவம் (A5 Size) | 330.00 | 355.00 |
| 2. | DBC பணியாளர்களின் வருகையினை குறிக்கும் துண்டு ஸ்டிக்கர் | 6.50 | 8.00 |
| 3. | பிட் நோட்டீஸ் (A4 Multi Colour) | 1.60 | 1.80 |

<u>அலுவலகக்குறிப்பு</u> 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 7</u>

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் வகை குப்பைகள் மற்றும் மக்காத வகை குப்பைகள் என தரம் பிரித்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடிலில் உரம் தயார் செய்யும் திட்டத்தினை 100 சதவீதம் வெற்றிகரமாக செயல்படுத்திட 18 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலும் குப்பைகளை தனித்தனியாக தரம் பிரித்து வழங்க ஏதுவாக வீட்டிற்கு 2 பிளாஸ்டிக் சாக்கு பைகள் சப்ளை செய்ய 22.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6$^{வா}$ வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |

| | | | |
|---|---|---|---|
| 1. | 15 * 19 அளவு கொண்ட பிளாஸ்டிக் சாக்கு பைகள் | 16.00 | 18.00 |
| 2. | 19 * 29 அளவு கொண்ட பிளாஸ்டிக் சாக்கு பைகள் | 21.00 | 24.00 |
| 3. | 19 * 35 அளவு கொண்ட பிளாஸ்டிக் சாக்கு பைகள் | 30.00 | 36.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 8</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் மக்கும் மற்றும் மக்காத வகை குப்பைகள் தரம் பிரித்து வழங்கவும், மக்கும் மற்றும் மக்காத வகை குப்பைகளை சேகரிப்பதற்கு 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் மற்றும் 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளை சப்ளை செய்ய 22.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6வா வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் | 1475.00 | 1600.00 |
| 2. | 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் | 995.00 | 1045.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 9</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண். 16ல் தென்றல் நகர் சிலப்பதிகாரம் 3வது தெரு கதவு எண்.11ல் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் திருமதி.கே.ஜான்சி ராணி அவர்களுக்கு

குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தி வந்தனர். அதற்கான குடிநீர் இணைப்பு எண்.4896 ஆகும். இந்நிலையில் கடந்த 08.01.18 தேதியி கடிதத்தில், தனக்கு குடிநீர் இணைப்பு வேண்டாம் என்றும், தான் செலுத்திய வைப்பு தொகை ரூ.5000/—ஐ திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். இந்நகராட்சி குடிநீர் இணைப்பிற்கான துணை விதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.130,131,132,306(3) (சி) (டி) (இ) (எப்) (எச்) (ஐ) கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் வரிசை எண்.(1)ல் உட்பிரிவு (இ)ன் படி குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று தெரிவிக்கும் பட்சத்தில், வைப்பு தொகை திரும்ப வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பினை கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்யவும், வைப்பு தொகை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> மேற்குறிப்பிட்ட குடிநீர் இணைப்பினை கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்யவும், வைப்பு தொகையினை மனுதாரருக்கு திரும்ப வழங்க கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 10</u>**

தூய்மை இந்தியா திட்டம் 2017—18ம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அனகாபுத்தூர் நகராட்சிக்கு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.05 அவர்களின் செயல்முறை உத்திரவு ந,க,எண்.4235/2018/பி3 நாள்.07.02.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of Work | Estimate Amount(Rs. in lakhs) |
|---|---|---|
| 1. | Purchase of Light Commercial vehicle 2.0 com capacity with Box Tipper BS4 – 9 Nos | 50.40 |
| 2. | Construction of MCC in ward 15 with processing capacity of 5 TPD including construction of compound wall | 49.00 |
| 3. | Construction of MCC in ward 4 with processing capacity of 3 TPD including construction of compound wall | 46.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>** 1. மன்றம் பதிவு செய்யலாம்.

2.பணியின் அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகளின்படியும் வரிசை எண்.2 மற்றும் 3 ல் உள்ள பசுமை உரக்குடிக்கு நகரமன்ற தீர்மான எண்.171 நாள்.31.08.2017ன்படி பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு 03.10.2017 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியினை தூய்மை இந்தியா திட்டம் 2017—18ம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.வரிசை எண்.1ல் உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில செய்தி மலரிலும், மாநில அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 11</u>**

அடையாறு ஆற்று பகுதியினை மேம்படுத்திட 56 எண்ணிக்கையிலான துணை திட்டங்கள் ரூ.557.04 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை எண்.72 நாள்.12.07.2017ன்படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அனகாபுகத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதியில் அமைந்துள்ள அடையாறு ஆற்றினை சீரமைப்பு பணிகளை முதற்கட்டமாக மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (கோடியில்) |
|---|---|---|
| 1. | Fence along the adyar river at anakaputhur | 3.00 |
| 2. | Interceptor main in Anakaputhur to collect the sewage folloing through SWD and divert it to a modular STP located on east side of the city | 15.65 |
| 3. | Solid Waste Removal in Municipalities | 0.12 |
| 4. | Community Toilets in anakaputhur | 0.31 |
| 5. | Vetiver grass palntion in anakaputhur | 0.50 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 12</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காவில் குழைந்தைகள் விளையாட்டு திடல் அமைய உள்ள இடத்தில் புதியதாக கான்கீரிட்டிலான பக்க சுவர் ( Retaining wall) அமைத்தால் மட்டுமே சிறுவர் விளையாட்டு திடல் அமைத்திட இயலும் என்பதால் இப்பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி செய்யலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 13</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் 25.01.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கல்மடுவு பகுதியில் அமைந்துள்ள சிறுவர் விளையாட்டு திடல் அருகில் கான்கீரிட்டிலான பக்க சுவர் ( Retaining wall) அமைத்தல் பணி | 2.00 | கே.உமாபதி<br>வி.குணாளன் | 0.15 % குறைவு<br>1.50 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதி செய்யலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 14</u>**

அரசாணை எண்.72, ந.நி.(ம)கு.வ. துறை(எம்சி1) நாள்.12.01.2017யின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அடையாற்றில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | Fence along the adyar river at Pammal,Tambaram & Anakaputhur | 12.97 |
| 2. | Interceptor main in Anakaputhur to collect the sewage folloing through SWD and divert it to a modular STP located on east side of the city | 15.65 |
| 3. | Solid Waste Removal in Municipalities | 0.12 |
| 4. | Community Toilets in Anakaputhur | 0.32 |
| 5. | Vetiver grass plantation in Pammal,Tambaram & Anakaputhur | 0.52 |

இப்பணிகளில் வரிசை எண்.1ல் உள்ள பணிக்கு மொத்தம் 12.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இந்நகராட்சி பகுதியில் அடையாற்றின் நீளமான 3.31 கி.மீ நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்திட ரூ.11.90 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அடையாற்றின் நீளமான 3.31 கி.மீ நீளத்தில் 1.81 கி.மீ நீளத்தில் 676 குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினரால் ஆக்கிரமிப்பினை அகற்றினால் மட்டுமே சுற்றுச்சுவர் அமைக்க இயலும் என்பதால் தற்போது ஆக்கிரமிப்பு இல்லாத பகுதிகளான 1.50 கி.மீ நீளத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதி செய்யலாம்.

**<u>பொருள் எண். 15</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016ன்படி மகளிர் பயன்படுத்திய நாப்கின்கள் மற்றும் குழந்தைகள் பயன்படுத்திய நாப்கின்கள் ஆகியவை உயர்த்த தட்ப வெப்பநிலையில் எரித்திட இன்சினிரெடர்கள் பயன்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 2 பசுமை உரக்குடில்களில் 2 இன்சினிரெடர்கள் அமைக்கவும், அதற்காகும் தோராய மதிப்பு ரூ.0.75 இலட்சம் ஆகும்.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி